விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 319 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 16 சனிக்கிழமை (02.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தேவைகளைப் புரிந்து கொள்வதன் மூலம்
# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு
### இந்திய உயர்ஸ்தானிகர் – அநுர கலந்துரையாடல்

*(கொழும்பு)* இலங்கை - இந்திய மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதன்மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என இந்திய உயர்ஸ்தானிகர் - ஜனாதிபதி சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## 34 வருடங்களின் பின் வயாவிளான் வீதி மக்கள் பாவனைக்குத் திறப்பு



03

## அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணப்படும்
### ஜனாதிபதி அநுர குமார

(கொழும்பு) அரிசித் தட்டுப்பாட்டுக்கு நீண்டகாலத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் 15

## வெளிப்படையான ஆட்சி முதலீடுகளை அதிகரிக்கும்
### இலங்கை தொடர்பில் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு) வெளிப்படையான ஆட்சி இலங்கையில் முத லீடுகளை அதி 15

## ஊடகங்களுக்கு அநுர அழுத்தம் கொடுக்கிறார்
### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

(கொழும்பு) ஊடகங்களுக்கு ஜனாதி பதி அநுர அழுத்தம் கொடுக்கிறார் என 15


## டிசம்பர் முதல் கடவுச்சீட்டு விநியோகம்
### விரைவுபடுத்தப்படும்

(கொழும்பு) எதிர்வரும் டிசம் 15










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை 503 மில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்தியுள்ளது

2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கை 503 மில் லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில், 275.1 மில்லியன் டொலர்கள் முதன்மைக் கடன் திருப்பிச் செலுத்துதலாகவும், 227.9 மில்லியன் டொல ர்கள் வட்டித் தொகை யாகவும் பதிவு செய் யப்பட்டுள்ளன.

இதேவேளை, 2024 ஜூன் மாத இறு திக் குள், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் அளவு 37.5 பில்லியன் டொலர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, பாதி க்கப்பட்ட இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளின் வெளிநாட்டுக் கடன் சேவை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் தற்காலிக மாக நிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை செலுத்தப்படாத கடன் தவணைகளின் தொகை 5,670 மில்லியன் டொலர்களா கவும், வட்டித் தொகை 2,527 மில்லியன் டொலர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.(ம-7)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ்.நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

**075 498 5400**
**077 937 0000**
**021 221 7600**

(508)


# புகையிரதம் மோதியதில் யாழில் ஒருவர் உயிரிழப்பு

புகையிரதம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திற்கு அருகாமை யில் உள்ள சிறிய வீதியில் உள்ள புகையிரதக் கடவை யிலேயே இவ் அனர்த்தம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் சுண்டிக்குளியைச் சேர்ந்த காது கேளாத, வாய் பேச முடியாத அரு ளானந்தம் ஜேசுதாசன் (வயது 58) என்பவரே உயி ரிழந்தவராவார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக் கிப் பயணித்த கடுகதி புகை யிரதத்துடன் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் உயிரிழப்புத் தொடர் பில் யாழ். போதனா வைத் தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நம சிவாயம் பிரேமகுமார் விசா ரணைகளை மேற்கொ ண்டார். (ம-7,60)


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சின்னப்பு பத்மநாதன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி: வளர்பிறையில் பிரதமை 02.11.2024

அகிலத்தில் நாம் உயர
வழிகாட்டியாக இருந்தவரே!
எமது குடும்ப ஒளி விளக்கே!
என்றும் மறவாது உங்கள்
நினைவுகள்...
என்றென்றும் உங்கள் நினைவலைகளுடன்
எங்கள் வாழ்க்கைப் பயணங்கள் தொடரும்...


தோற்றம் 07.02.1944 மறைவு 31.10.2016

“மிதிலா”
கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி

உங்கள் நினைவுகளுடன்...
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(505)



# கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்



எதிர்வரும் நவம்பர் 27, தமிழ்த்தேசிய மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட வுள்ள நிலையில் கனக புரம் மாவீரர் துயிலுமில் லத்தில் நேற்றையதினம் சிரமதானப் பணி கள் மாவீரர் பணிக்குழுவின் வழிகாட்டலில் ஆரம் பிக்கப்பட் டன.

கனகபுரம்மாவீ ரர் பணிக்குழுவி னால், முறைமை ப்படுத்தப்பட்ட வகையில் ஒழுங் கமைக்கப்பட்ட மேற்படி சிரமதா னப் பணிகளில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் பலரும் கலந்து கொண் டிருந்த னர். (ம-7,316)


**செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு**



செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்
ரூபாய் 9999/= மட்டுமே
செலுத்தி செவிப்புலன்
கருவி ஒன்றினை
உங்களுடையதாக்கி
கொள்ளுங்கள் சென்ற
முறை தவற விட்டவர்களுக்கு
மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்


உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.
முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள்.
விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே!

**077 434 6245**

(605)



# மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 12 - 1939
மறைவு 30 - 10 - 2024

## திருமதி மகேஸ்வரன் சிவயோகம் (மணி அக்கா)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியை வசிப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் சிவயோகம் அவர்கள் 30.10.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நீலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற டிங்கர் மகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் பாலசந்திரன் (ஜேர்மனி), கனகாம்பிகை (ஜேர்மனி), ஜெயச்சந்திரன் (சுவிஸ்), ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமலர், ஜெயலிங்கம், அருந்ததி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் இராஜேஸ்வரி (பிரான்ஸ்), அழகம்மா, பாலசுப்பிரமணியம் (டிங்கர் மணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதாம்பாள், நடராசா, கண்மணி மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் சுவதா, அஜந்தா, காவியன், சஜன், கரிகாலன், அபிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.11.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3 ஆம் ஒழுங்கை,
அரசங்குளம்,
ஓமந்தை, வவுனியா.

077 4686 448, 077 7679 071
077 7517 285

தகவல்:
குடும்பத்தினர்

(2550)



# 20 ஆம் வருட நினைவலைகள்

அமரர் **கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**
(ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் - ஊர்காவற்றுறை)



“அப்பா” எனும் சுந்தரச் சொல்!
எம்மை ஆட்டுவிக்கும் மந்திரச்சொல்!
உன் உயிர் அளித்து உதிரத்தில்
விளைத்த முத்துக்கள் – எங்கள்
சீரிய சிந்தனை அத்தனையும் உந்தனதே!
மாற்றங்கள் வழக்கமாகிட
மாறாமல் இருப்பது – உன்
நினைவுகள் மட்டும் தான்
உணர்வாக எமக்குள்
உலாவரும் கோமகனே!
என்றென்றும் எமக்காய்
வழிகாட்டும் விண்ணிலிருந்து

மலர்வு 10.05.1946
உதிர்வு 02.11.2004

சரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

நீங்கா நினைவுடன்....
நின் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(2552)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# பதுளையில் கோர விபத்து!

- மூவர் உயிரிழப்பு
- 35 பேருக்கு காயம்
- 6 பேர் அதி தீவிர சிகிச்சையில்

## சுற்றுலா சென்ற போது சோகம்

(கொழும்பு)

**ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்து ஒன்று பதுளை துன்ஹிந்த பிரதேசத்தில் விபத்துக் குள்ளானதில் மூவர் உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.**


கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுற்றுலா சென்ற பேருந்தே இவ்வாறு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.


இவ்விபத்து இடம்பெற்ற போது குறித்த பேருந்தில் 41 பேர் வரை பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விபத்தில் மூவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனவும் ஏனையவர்கள் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)



# 34 வருடங்களின் பின் திறக்கப்பட்ட வயாவிளான் வீதி





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதி - வயாவிளான் சந்தி - தோலகட்டி சந்தி வரையிலான வீதி 34 வருடங்களுக்கு பின்னர் மக்கள் போக்குவரத்திற்காக நேற்றுக் காலை ஆறு மணி இல் இருந்து அனுமதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் வயாவிளான் மத்திய கல்லூரியில் இருந்து வயாவிளான் சந்தியிலிருந்து அச்சுவேலி வீதியில் தோலகட்டி வரையிலான சுமார் 1.250 கிலோமீற்றர் வீதி மக்கள் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டது.


இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பகுதி வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் அனுமதிக்கமைய மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் காணப்பட்ட வீதித்தடைகள் நேற்றுக் காலை முதல் இராணுவத்தினரால் விலக்கப்பட்டது. (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்

# தக்கவைக்கப்பட்ட வீரர்கள் பட்டியல் விபரம்




இந்தியன் பிரீமியர் லீக்கின் (ஐபிஎல்) போட்டியில் அனைத்து பத்து உரிமையாளர்களிடமிருந்தும் தக்கவைக்கப்பட்ட வீரர்கள் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

**1. சென்னை அணி**

ருதுராஜ், ரவீந்திர ஜடேஜா (18 கோடி), பத்திரன (13 கோடி), டூபே (12 கோடி), டோனி (4 கோடி).

**2. டில்லி**

அக்ஸர் (16.50 கோடி), குல்தீப் (13.25 கோடி), ஸ்டப்ஸ் (10 கோடி), அபிஷேக் (4 கோடி).

**3. குஜராத்**

ரஷித் (18 கோடி), கில் (16.5 கோடி), சுதர்ஷன் (8.50 கோடி), திவாட்டியா , சாருக்கான் (4 கோடி)

**4. ராஜஸ்தான்**

சாம்சன், ஜெய்ஸ்வால் (18 கோடி), பராக் , ஜுரல் (14 கோடி), ஹெட்மயர் (11 கோடி), சந்தீப் (4 கோடி).

**5.சன்ரைசர்ஸ்**

கிளாசென் (23 கோடி), கம்மின்ஸ் (18 கோடி),அபிஷேக் ,ஹெட் (14 கோடி), நிதிஷ் (6 கோடி).

**6. கொல்கத்தா**

ரிங்குசிங் (13 கோடி),வருண்,நரேன், ரஸ்ஸல் (12 கோடி), ராணா (4 கோடி), ரமன்தீப் (4 கோடி).

**7. மும்பை**

பும்ரா (18 கோடி), சூர்யகுமார் (16.35 கோடி),ஹர்த்திக் (16.35 கோடி), ரோஹித் (16.30கோடி),திலக் (8 கோடி)

**8. பஞ்சாப் கிங்ஸ்**

ஷஷாங்க் சிங் (5.5 கோடி),பிரப்சிம்ரன் சிங் (4 கோடி)

**9. பெங்களூர்**

கோலி (21 கோடி), படிதார் (11 கோடி), தயாள் (5 கோடி)

**10. லக்னோ**


பூரன் (21 கோடி),பிஷ்னோஷ், யாதவ் (11 கோடி), படோனி (4 கோடி), மொஹ்சின் (4 கோடி). (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3253

சாதனா




மிலக்ஷி




கனிமொழி




ஐங்கரன்




அகல்யா







நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
# பாராளுமன்ற தேர்தல் 2024

## ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2





கல்விக்காருண்யன்
E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள்
சமூக நலன் மேம்பாட்டிற்காக
கல்வி, விளையாட்டு,
கலை-கலாசாரம் என மக்களுக்கு
ஆற்றிவரும் பணி அளப்பரியது.

E.S.P. நாகரத்தினம்
**கமலரூபன்**
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

**அரசியல் மற்றும் பொருளாதார சிந்தனையுள்ள**
**மண்ணையும், மக்களையும், நேசிக்கும் ஆளுமைமிக்க இளைஞனே**

**மக்களின் எதிர்பார்ப்பு...**

### தந்தையாரின் சமூகப்பணிகள் சில....

### சிறு வயது முதல் களத்தில் கமல்....



யா / தேசிய கல்வியியற் கல்லூரியால் "கல்விக்காருண்யன்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது...



சென் ஜோன்ஸ் கல்லூரியில்...




கொழும்பு இந்துக் கல்லூரியில்...



வடக்கின் சமர் அனுசரணையின் போது...




இந்துக்களின் சமர் அனுசரணையின் போது...




கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க முத்தமிழ் விழாவின் தலைமை உரையின் போது...



சிறுவர்களுக்கான கல்வி வழிகாட்டல்களின் போது...



தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கான காணி அன்பளிப்பு...



பாடசாலை கட்டுமானங்கள் தொடர்பான கள விஜயம்



தேர்தல் களத்தில் கமல்...


ஊஞ்சல் சின்னம்
சுயேச்சைக் குழு - 2

X 1 2 3 4 5 6 7 8 9

(043)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களம்




# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண பாடுபடுவேன்

## சங்குச் சின்னத்தில் போட்டியிடும் சிவாஜிலிங்கம்


(கரணவாய்)

இம்முறை தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவு செய்யப்பட்டால் நீண்டகாலமாக நீடித்துவரும் மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபடுவேன் என ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்குச் சின்னத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் வடமராட்சி ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் தமிழீழ மீனவர்களுக்கும் இடையில் தீராதுள்ள இந்தப் பிரச்சினை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களும் நேரில் பேசுவதன் மூலமே இணக்கமான சூழலை ஏற்படுத்த முடியும்.

எல்லைதாண்டி வரும் விசைப்படகுகள் மூலம் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களாலேயே கடல் வளம் பாதிக்கப்படுவதுடன் மீனவர்களது




வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது. ட்ரோலர் படகுகள் மூலம் சர்வதேச கடற்பரப்பிற்குச் சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்முறை தேர்தலின் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவு செய்யப்படுவேனாக இருந்தால் மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண பாடுபடுவேன்.

மேலும் எமது மீனவர்களை இராமேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்று நேரடியாக அங்குள்ள மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்கும் தமிழக, இந்திய அரசு மட்ட பேச்சுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்தார். (6-8-60)

# புதியவர்களுக்கும் வாய்ப்பளியுங்கள்

## தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும் விஜயன்



(குருமன்காடு)

வன்னியில் மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முன்பிருந்த மக்கள் பிரதிநிதிகளே காரணம்.

இதனால் இம்முறை புதியவர்களுக்கு வாய்ப்பளியுங்கள் என ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தபால் பெட்டி சின்னத்தில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும் தொழிலதிபருமான கு.விஜேந்திரரத்தினம் (விஜயன்) தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

போரால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இளைஞர், யுவதிகள் பலர் வேலைவாய்ப்பு இல்லாது அவர்களது குடும்பங்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளன.

அரச தொழில் வாய்ப்பை மட்டும் நம்பாது எமது மண்ணில் கைத்தொழிற்சாலைகளை நிறுவி அதற்கேற்ப தொழில் வாய்ப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பதற்கும் அவர்களது வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கும் நாம் குரல் கொடுப்போம்.

எனவே வன்னித் தேர்தல் தொகுதியில் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தபால் பெட்டிச் சின்னத்தை பலப்படுத்த மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என தெரிவித்தார். (6-8-250)

# ஜ.த.தே கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கூட்டணியின் வேட்பாளர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், குரு சுவாமி சுரேந்திரன், சி.வேந்தன், பா.கஜதீபன் சசிகலா ரவிராஜ், ஜெ.ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8)

# இராசிபலன்

02.11.2024
ஐப்பசி 16, சனிக்கிழமை
பிரதமை முன்னிரவு 8.04 மணிவரை
விசாகம் முழுவதும்

சுபநேரம் -3.04-4.34 மணிவரை
இராகுகாலம் -9.04-10.34 மணிவரை
கந்தசஷ்டி விரதாரம்பம்

சந்திராஷ்டமம்.
ரேவதி.

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விருப்பங்கள் நிறைவேறும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது.




மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள்.




மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, கொடுக்கல்வாங்கல்கள் ஒழுங்காகும்.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தில் நிலவிய கருத்து முரண்பாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிட வேண்டிய நாள்.




வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சேமிப்பு உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சயனசுகக் குறைவான நாள்.




பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவம் மிக்க மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




வீண் பழிகள் அகலும் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பணப்பற்றாக் குறை ஏற்படும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**உன்னை நேசிப்பது நாயாக இருந்தாலும் அதனை நீ நேசிப்பாயாக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெண் வன்னி மாவட்ட வேட்பாளர் யசோதினி கருணாகரன் மற்றும் யாழ்.மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் ஆகிய இருவரும் நேற்று ஆயர் இல்லத்தில் யாழ்.மறை மாவட்ட ஆயரைச் சந்தித்தனர்.

இவர்களுடன் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆயரைச் சந்தித்திருந்தனர்.

(படம்-சிவசாந்தன்)

## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை அவதானிப்பதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், தபால் மூல வாக்களிப்பை கண்காணிக்க 1000 பார்வையாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

### நாட்டரிசிக்கான

## கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டரிசி கிலோவொன்றுக்கான கட்டுப்பாட்டு விலையை 240 ரூபாயாக அதிகரிக்க வேண் டும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் அரிசி விலையை அதிகரிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டரிசி கிலோவொன்று தற்போது 220 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை 60 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீர சூரியவின் உத்தரவு மற்றும் பணிப்புரைக்கு அமைவாக விசேட பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சிபாரிசுகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்பிற்காக 60 அதிகாரிகள், 2 ஜீப் வாகனங்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர மேலதிகமாக அதிகாரிகள் இருந்தால் இன்று அந்தப் பிரிவுக்கு பொறுப்பான டி.ஐ.ஜி.யிடம் முறைப்பாடு அளிக்க வேண்டும் என்றும் வழங்கப்பட்ட வாகனங்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இருந்தால் அவற்றை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1259 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 342 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 917 முறைப்பாடுகளும் 31 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 123 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவங்கள் 2 பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)



திரு வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கேதார கௌரி விரத பூஜை வழிபாடு பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## இரட்டைக் கொலை வழக்கு சந்தேக நபர் மூவர் மறியலில்

(கரணவாய்)

கற்கோவளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

மாணிக்கம் சுப்பிரமணியம் அவரது மனைவியான மேரிரீட்டா ஆகியோர் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த வேளை கொலைச்சம்பவத்துடன் தொடர்புபட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை பொலிஸாரால், நேற்று பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் நடராஜா ரஜீவன் முன்பாக முற்படுத்தப்பட்ட போது குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான்கட்டளை பிறப்பித்திருந்தார்.(6-8-60)

## மீண்டும் வேலைநிறுத்தம்

### ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தீபாவளியை முன்னிட்டு இடைநிறுத்தப்பட்ட பணிப்புறக்கணிப் புக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் இன்று மீண் டும் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு நடைமுறைகளை முறைப்படுத்துதல், சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு காணுமாறு கோரி கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் அன்றைய தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974 (490)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம் 43/2, மொட்டையப்புலம் வீதி, வட்டாரம் - 13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுலலகத்திற்குட்பட்ட வட்டாரம் 13, மொட்டையப்புலம் வீதியிலுள்ள இல: 43/2 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதி வேட்டின் பிரகாரம் ஐயாத்துரை சின்னத்துரை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் கணபதியார் தம்பையா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1507/10.07.1989ஆம் இலக்க உறுதியால் தம்பிப்பிள்ளை மகள் சின்னத்துரை அம்மா ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கந்தசாமி நவேந்திரன் பெண் சிவரஞ்சினி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1710/25.01.2008ஆம் இலக்க உறுதியால் குறித்த கணபதிப்பிள்ளை தம்பையாவும் பெண் மாணிக்கமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த கந்தசாமி நவேந்திரன் பெண் சிவரஞ்சினி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி நவேந்திரன் பெண் சிவரஞ்சினி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,

வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(2535)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரதம்

# லடாக்கில் இனிப்புப் பரிமாறிய சீன-இந்திய வீரர்கள்



(டில்லி)
தீபாவளியை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழன் அன்று இந்திய மற்றும் சீன இராணுவத்தினர் லடாக்கில் உள்ள இரண்டு இடங்கள் உட்பட உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டின் (LAC) ஐந்து இடங்களில் இனிப்பு பண்டங்களை பரிமாறிக்கொண்டனர்.

லடாக்கில் உள்ள சுஷூல் மால்டோ, தௌலத் பெக் ஓல்டி, பாஞ்சா (கிபுட்டுக்கு அருகில்), அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள பும்லா மற்றும் சிக்கிமில் உள்ள நாதுலா ஆகிய இடங்களில் இனிப்புகள் பரிமாறப்பட்டுள்ளன.

இது சீன-இந்திய உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கடந்த பல வாரங்களாக நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே கிழக்கு லடாக்கில் LAC வழியாக ரோந்து மற்றும் வீரர்களை வெளியேற்றுவது தொடர்பாக ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டது.

இது நான்கு ஆண்டு கால மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது.

ஒப்பந்தம் 2020 இலிருந்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழிவகுக்கும் என்றும் இந்திய வெளிவிவகாரச் செயலர் விக்ரம் மிஸ்ரி கடந்த ஒக்டோபர் 21 ஆம் திகதி டில்லியில் தெரிவித்தார். (நி)

# 20 வருடங்களாக பட்டாசு வெடிக்காமல் தீபாவளி கொண்டாடும் மக்கள்

(சென்னை)
தீபாவளி பண்டிகை என்றாலே பட்டாசு வெடித்து கொண்டாடுவது வழக்கம். ஆனால் சில கிராம மக்கள் பட்டாசு வெடிப்பதேயில்லை என்ற ஒரு தகவல் அதிர்ச்சியளிக்கிறது.

அந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள 10 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் தீபாவளிப் பண்டிகையை 20 ஆண்டுகளாக தவிர்த்து வருகின்றனர்.

இதற்கு காரணம் சென்னிமலை அருகே வெள்ளோட்டில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயம் தான்.

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு அருகே 'வெள்ளோடு பறவைகள் சரணாலயம்' அமைந்துள்ளது. சுமார் 240 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்தப் பறவைகள் சரணாலயத்தில் 50 ஏக்கர் அளவில் 30 அடி ஆழத்தில் தண்ணீர் தேங்கும் வகையில் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ் வாய்க்காலின் கசிவு நீர், மழைக்காலங்களில் ஓடைகளில் நிரம்பி வரும் நீர் ஆகியவற்றை மூலாதாரமாகக்கொண்டு விளங்குகிறது.



பறவைகள் இனப்பெருக்க காலங்களில் மஞ்சள் மூக்கு நாரை, நத்தை குத்தி நாரை, வெள்ளை அரிவால் மூக்கன், பொறி உள்ளான், நீலவால், இரைக்கோழி, சிறிய நீர் காகம், சாம்பல் நாரை, பஞ்சுருட்டான் உள்ளிட்ட உள்நாட்டுப் பறவைகள் வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தை நோக்கி வருகின்றன.

மேலும் சைபீரியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து சுழைக்கடா, வண்ண நாரை, நெடுங்கால உள்ளான், செம்பருந்து, பூ நாரை, வால் காக்கை, காஸ்பியன் ஆலா, வெண்புருவ சின்னான், கருங்கழுத்து நாரை உள்ளிட்ட வெளிநாட்டுப் பறவைகளும் கூட்டம் கூட்டமாக வெள்ளோடு சரணாலயத்திற்கு வருகின்றன.

இவ்வாறு பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து மரங்களில் கூடு கட்டி, குஞ்சுகளுடன் கூச்சலிட்டுக் கொஞ்சி மகிழும் இந்த பறவைகளின் கீச் சொலிகளை கேட்கும் போது காதுகளுக்கு மட்டுமில்லாது மனதுக்கும் ஒரு அமைதியை அளிக்கின்றது.

இவ்வாறு வரும் பறவைகளுக்கு எந்த விதமான இடையூறும் வந்துவிடக்கூடாது என அப்பகுதியிலுள்ள கிராமத்தினர் முடிவெடுத்துள்ளனர்.

இதன் ஒருபகுதியாக, இந்தப் பறவைகள் சரணாலயத்தைச் சுற்றியுள்ள பி:மேட்டுப்பாளையம், பூங்கம்பாடி, தலையன்காட்டு வலசு, தச்சன்கரைவழி, செம்மாம்பாளையம், எல்லப்பாளையம் உள்ளிட்ட 10 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் பட்டாசு வெடிக்காமல் தீபாவளியை கொண்டாடுகின்றனர்.

அதன் அடிப்படையில் இந்த வருடமும் தொடர்ந்து 20 ஆவது ஆண்டாக பட்டாசு வெடிக்காமல் அமைதியான முறையில் தீபாவளியைக் கொண்டாடினர். (நி-8)

கூகு


அபர

(மொஸ்கோ)
பொய் செய்தி
நிறுவனத்திற்கு
கோடி ரூபாய்
விதித்துள்ளது.

இந்த அபராதத் தொகையானது முழு உகை பொரு ளாதாரத்தையும் விஞ்சும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது அமெரிக்க டொலரில் 20 டெசில்லியன் எனக் கூறப்படுகிறது.

உக்ரைன் மீது ரஷ்யா போர்

# தாய்வா காங்-



(தாய்பேய்)
தாய்வானை தாக்கிய காங்-ரே புயலால் பல்வேறு இடங்கள் கடுமையான சேதத்தை சந்தித்துள்ளன.

மணிக்கு 250 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்றுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 டெசில்லியன்

# ...தள் நிறுவனத்திற்கு

# ...ராதம் விதித்த ரஷ்யா!

...)

...ப்திகளை அகற்றாததால் கூகுள் ...கு ரஷ்ய நீதிமன்றம் சுமார் 3 ஆயிரம் ...ப் (இந்திய மதிப்பில்) அபராதம் ...வ.




...து ...ம் ...ா. ...ஒ ...ர் தொடுத்ததில் இருந்து பல்வேறு தவறான செய்திகள் பரப்பப்படுவதாக குற்றம் சாட்டிய ரஷ்யா, பொய் செய்திகளை உடனடியாக அகற்ற வேண்டும் என அறிவுறுத்தியது.

ஆனால் யூடியூப்பில் ரஷ்ய இராணுவம் தொடர்பாக உண்மைக்கு புறம்பான ஏராளமான வீடி யோக்கள் அகற்றப்படாமல் இருந்தன.

இதனை கூகுள் நிறுவனம் அகற்றாததால் மொஸ்கோவில் உள்ள நீதிமன்றம் 373 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது.

ஒன்பது மாத காலத்திற்குள் இந்த உத்தரவிற்கு இணங்க மறுத்தால் அபராதத் தொகை ஒவ்வொரு நாளும் இரட்டிப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-8)

# ...வானை தாக்கிய

# ...-ரே புயல்



காங்-ரே புயல் தாய்வானை தாக்கியதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புயல் கரையை கடக்கும் போது பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. சூறாவளி காற்றில் மரங்கள், மின்கம்பங்கள் முறிந்து விழுந்ததால் பல இடங்களில் மின் தடை நிலவியது.

கடலோர பகுதிகளில் அலைகள் ஆக்ரோஷமாக எழும்பின.

கனமழை காரணமாக வீடுகள், சாலைகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மோசமான வானிலை காரணமாக விமான சேவை முற்றிலும் முடங்கியது.

1966 ஆம் ஆண்டுக்கு பிறகு தாய்வானை தாக்கிய மிகப்பெரிய புயலாக காங்-ரே அறிவிக்கப் பட்டுள்ளது. (நி-8)

## ஜேர்மனி கைதிக்கு மரண தண்டனை

## தூதரகங்களை மூட ஈரானுக்கு உத்தரவு



(பெர்லின்)

ஈரான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜேர்மனியைச் சேர்ந்த ஜாம்ஸித் ஷர்மாத்திற்கு கடந்த திங்கிட்கிழமை ஈரான் மரண தண்டனையை நிறைவேற்றியது.

இதனால் ஜேர்மனியில் உள்ள மூன்று தூதரகங்களை உடனடியாக மூடுமாறு ஈரானுக்கு ஜேர்மனி உத்தரவிட்டுள்ளது.

69 வயதாகும் ஷர்மத் அமெரிக்காவில் வசித்து வந்தார். டுபாய்க்கு கடந்த 2020 ஆம் ஆண்டு சென்றபோது ஈரான் பாதுகாப்புப்படையினரால் கடத்தப்பட்டார்.

2023 ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்ற விசாரணையில் ஜேர்மனி, அமெரிக்கா, சர்வதேச உரிமைகள் குழுக்களின் வாதங்கள் பொய்யானவை என நீதிமன்றத்தால் புறக்கணிப் பட்டது.

அதன் அடிப்படையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

பிராங்பர்ட், ஹம்பர்க், முனிச் ஆகியவற்றில் உள்ள தூதரகங்களை மூட ஜேர்மனி உத்தரவிட்டுள்ளது. பெர்லின் நகரில் மட்டும் இயங்கும் எனத் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடன் திட்டம்

## இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கையின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வைப் பற்றி கலந்துரையாட சர்வதேச நாணய நிதியத்தின் குழு வொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும் என ஐ.எம்.எப் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் நேற்று நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மற்றும் குழுவினருடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்களுக்காக இலங்கைக்குழுவொன்று வோஷிங்டனுக்கு வந்துள்ளதாகவும், இலங்கையின் புதிய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் மேலும் குறிப்பிட்டார். (ஞ)




கலாநிதி. (எந்திரி). சுப்பிரமணியம் சிவகுமார் எழுதிய 'வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும் பங்கீட்டுக்கொள்கையும்' நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி தந்தைசெல்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 450 | 500 | 400-500 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 350 | 350-400 | 500 |
| தக்காளி | 300 | 300 | 300 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 240 | 150-200 | 200 |
| கோவா | 200 | 280 | 250 | 200 | 300 |
| கரட் | 180 | 200 | 250 | 150 | 200 |
| பூசணி | 100 | 100 | 280 | 80-100 | 150 |
| புடோல் | 150 | 180 | 120 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-100 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 200 | 250 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 240 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 500 | 550 | 450 | 500-700 | 800 |
| வெண்டக்காய் | 180 | 200 | 120 | 100-130 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 180 | 300-350 | 600 |
| லீக்ஸ் | 280 | 300 | 250 | 200 | 320 |
| பீற்றூட் | 120 | 120 | 180 | 100 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 500-600 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 150 | 40-60 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | 400 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 120 | 100 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 250-350 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-145 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 60 |
| ஈரப்பலா | 120 | 100 | 60 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 230



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தந்திரம்

இந்த உலகத்திலே எத்தனையோ விதமான மிருகங்கள் இருக்கின்றது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான குணம். இதிலே தந்திரத்திற்குப் பெயர் போனது நரி. மனிதர்களாலே கூட சிலபேரைப் பார்த்து இதோ இருக்கின்றாரே அவர் சாமான்ய பேர் வழியில்லை குள்ளநரி அவரிடம் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். ஏமாந்து போய்விடாதே என்று சொல்வது உண்டு.

அது சரி தந்திரம் என்றால் அது எப்படி இருக்கும். அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் சீன தேசத்துக் கதை ஒன்றை நீங்கள் கேட்க வேண்டும்.

ஒரு காட்டிலே ஒரு நரி இருந்தது. அங்கே ஒரு ஓநாயும் இருந்தது. இது இரண்டும் நண்பர்கள். இந்த இரண்டு பேரிலே யாருக்கு என்ன கிடைத்தாலும் அதைப் பங்கு போட்டு இரண்டு பேரும் சாப்பிடுவார்கள். அப்படி ஒரு ஒப்பந்தம் அவர்களுக்குள்ளே.

ஒரு நாள் ஓநாய் வேட்டைக்குப் போனது. போன இடத்திலே இரண்டு முயல் கிடைத்தது. அதை அடித்துக் கொண்டு வந்து நரியிடம் கொடுத்தது.

இதை நன்றாக சமைத்து வை நான் போய் நம்முடன் சேர்ந்து சாப்பிடுவதற்கு ஒரு விருந்தாளியைக் கூட்டிவருகின்றேன் என்று சொல்லிவிட்டுப் போனது.

அந்தக் காட்டிலே ஒரு வயதான கரடி இருந்தது. அது இவர்கள் இரண்டு பேருக்குமே நண்பன். அதைக் கூட்டிக் கொண்டு வருவதற்குத் தான் ஓநாய் போனது. கரடி தான் அன்றைக்கு விருந்தாளி.

ஓநாய் போனவுடனே நரி சமையல் வேலையை ஆரம்பித்தது. இரண்டு முயலையும் அருமையாக சமையல் செய்து முடித்தது.

கரடியை அழைத்துக் கொண்டு வரப்போன ஓநாய் இன்னும் திரும்பி வரவில்லை. ஆனால் அதுவரைக்கும் நரியாலே நாக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எவ்வளவு நேரம் தான் முயல்கறியையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியும்.

அதிலே கொஞ்சம் எடுத்து வாயிலே போட்டது. மிகவும் ருசியாக இருந்தது. கிடுகிடு என்று கொஞ்ச நேரத்திலே ஒரு முயலைக் காலி பண்ணிவிட்டது.

இன்னும் ஓநாயும் கரடியும் வந்து சேரவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் ஆகியது. இன்னொரு முயலும் நரி வயிற்றுக்குள்ளே போனது.

சமையல் செய்த இரண்டு முயல்களும் முடிந்தது. அதன்பின் அது யோசிக்க ஆரம்பித்தது. ஓநாய் திரும்பி வந்ததும் முயல் எங்கே என்று கேட்டால். அதற்கு என்ன பதில் சொல்வது? இப்படி யோசித்துக் கொண்டிருக்கின்றபோதே ஓநாய் வேகமாக வந்து சேர்ந்தது.

இதோ பார் எங்கள் விருந்தாளி கரடியார் பின்னாலே வந்து கொண்டிருக்கின்றார். நீ அந்த முயலை எடுத்து ஒரு தட்டிலே வை. அதை துண்டு போடுவதற்கு நான் கத்தியை தீட்டிக் கொண்டு வருகின்றேன். என்று சொல்லிவிட்டு ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு மரத்தடிப் பக்கமாக போனது ஓநாய்.

ஓநாய் கத்தியை தீட்டிக்கொண்டிருக்கிறது. நரி புத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்திலே அந்த வயதான பெரியவர் அது தான் கரடியார் வந்து வாசல் படியிலே அடி வைத்தார். நரி பார்த்தது.

ஐயோ பாவம் என்றது. ஏன் அப்பிடிச் சொல்கின்றாய் என்றது கரடி. உனக்கு விடயம் தெரியாதா? இன்றைக்கு உன்னுடைய இரண்டு காதையும் வெட்டி எடுத்து அதைப் பொரித்து சாப்பிட வேண்டும் என்றது ஓநாயின் திட்டம் என்றது நரி.

கரடி பயந்து கொண்டே காதை தடவிப்பார்த்தது. அப்படியா சொல்கின்றாய் என்றது. ஆமாம். அதோ பார் தூரத்திலே அந்த மரத்தடியிலே ஓநாய் கத்தியை தீட்டிக் கொண்டிருக்கின்றது என்று காட்டியது நரி.

சரியான நேரத்திலே என்னைக் காப்பாற்றினாய் மிகவும் நன்றி என்று சொல்லிவிட்டு அந்தக் கரடி காது இரண்டையும் கையாலே பொத்திக் கொண்டு வேகமாக நடக்க ஆரம்பித்தது. நரி அதற்குப் பின் மெதுவாக ஓநாயிடம் வந்து விடயம் தெரியுமா? உனக்கு என்றது.

என்ன என்றது கேட்டது ஓநாய். அந்த பெரிய மனிதன் கரடியார் இரண்டு முயலையும் தூக்கிக்கொண்டு ஓடுகின்றார். இது நியாயமா என்றது. ஓநாய் கத்தியோடு குபீர் என்று எழுந்து நின்றது.

அடுத்த விநாடியே கரடியை துரத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தது. கரடி திரும்பிப் பார்த்தது ஓநாயின் கையிலே கத்தி. காதை இன்னமும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது. ஓநாய் விடவில்லை.

இரண்டிலே ஒன்றையாவது கொடு நான் சாப்பிடுவதற்கு என்று கத்தியபடி ஓடியது. இது காதிலே விழுந்ததும் கரடி இன்னமும் வேகமாக ஓட ஆரம்பித்தது. நரி இது இரண்டையும் எப்படி ஓடவிட்டது பார்த்தீர்களா?


இது தான் நரித் தந்திரம் என்கின்றது. நரி அடுத்தவர்களை ஓடவிட்டு முட்டாளாக்கியது. மனிதன் அடுத்தவர்களை இருந்த இடத்திலேயே முட்டாளாக்கி விடுகின்றான். நரியை விட இவன் கெட்டிக்காரன். ஒருவர் ஒரு நாள் என்னிடம் வந்தார். சார் இங்கே யாரோ முட்டாள் இருக்கின்றாராம். யார் என்ன கேட்டாலும் தெரியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறாராம். உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்.

நான் உடனே தெரியாது என்றேன். அப்படி என்றால் அது நீங்கள் தான் சார் என்று சொல்லிவிட்டு வேகமாக ஓட ஆரம்பித்தார். அந்த ஓநாய் மாதிரி என்னால் ஓட முடியவில்லை. பேசாமல் உட்கார்ந்து விட்டேன். அப்படி அவர் ஒன்றும் தப்பாக எதையும் சொல்லிவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலத்தில் இராணுவ நெருக்கடிகளைக் கடந்து மக்கள் பணியாற்றிய அரச அதிபர் இராசநாயகம்

## அவரது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது



மிகவும் கடுமையான போர்ச்சூழலைக் கொண்ட வருடம் 1996. யாழ்ப்பாணத்தில் இருந்தும் மக்கள் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்திருந்த காலமது. வவுனியாவில் இருந்து உணவு லொறிகளை அரசு அனுப்பாமல் இருந்தது. கிளிநொச்சியில் இருந்து வவுனியா சென்று உணவு வாகனத் தொடரணியைக் கொண்டுவர அதிகாரிகள் மரணபயத்தினால் மறுத்தார்கள்.

இந்நிலையில் அப்போது மேலதிக அரசாங்க அதிபராக இருந்த தி. இராசநாயகம் கிளிநொச்சியிலிருந்து 25 லொறிகளைக் கொண்டு சென்று மக்களுக்காக உணவுப்பொருட்களை எடுத்து வரும் முயற்சியில் இறங்கினார். இதற்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையில் லொறி ஒன்றில் பற்றி வைக்கப்பட்டு பொருட்களை கொண்டு செல்ல முடியாது தடையை ஏற்படுத்த முயற்சித்த போதும் அதற்கு எதிராகத் துணிந்து வாதாடி கிளிநொச்சிக்கு உணவுப் பொருட்களை நிரப்பிய வாகனத் தொடரணியைக் கொண்டு வந்து சேர்த்தார் முன்னாள் அரச அதிபர் இராசநாயகம்.

போரும் இடம்பெயர்வுகளும் மரணமும் சூழ்ந்த காலத்தில் மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராகவும் பின்னர் அரச அதிபராகவும் பணியாற்றிய இராசநாயகம் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் கலை, கல்வி, சமூக, சமய மேம்பாட்டிற்காகப் பணியாற்றியுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் அப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த திருநாவுக்கரசு பாக்கியம் தம்பதிகளின் மகனாக 02.05.1946 ஆம் ஆண்டில் பிறந்தார். பூநகரி அத்தாய் சிறிமுத்துக்குமாரசுவாமி பாடலையில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் பூநகரி மகாவித்தியாலத்தில் இடை நிலைக் கல்வியையும் யாழ் இந்துக்கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றுள்ளார். பின்

### மறைந்தார் மாண்பு

னர் பேராதனைப் பல்கலை கழகத்தில் கல்வி கற்று வெளியேறிய கலைப்பட்டதாரி ஆவார். கணக் காய்வாளராகப் பணி தொடங்கிய இவர் பல பதவிகளை வகித்தார். திட்டமிடல் உதவிப்பணிப் பாளராகவும் பணி யாற்றி யதுடன் சிவில் நிர்வாகப் பணி சார்ந்து அமைச்சுக்களிலும் பணி யாற்றினார்.

ஒருமுறை வன்னிக்கு வவுனியாவில் இருந்து உணவை எடுத்து வரும் பணியில் அரச அதிபராக இருந்த இராசநாயகம் ஈடுபட்டுள்ளார். இதன்போது ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து வழிமறித்த இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கா இந்த உணவை எடுத்துச் செல்கிறீர்கள்? என்று கேட்டுள்ளார். வன்னியில் பிரபாகரன் மாத்திரமல்ல அவரது தாய், தந்தையரும் வேறு பல பிள்ளைகளும் மக்களும் உள்ளனர். ஒரு அரச அதிபர் என்ற வகையில் அவர்களுக்கு உணவு கொடுப்பது எனது கடமை என்று கூறியபோது அந்த இராணுவ அதிகாரிகள் வாயை மூடிக் கொண்டு வழிவிட்டதாக அந்நாட்களில் பேசப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் அரசு வலுப்பெற்ற காலத்தில் இவரே கிளிநொச்சி மாவட்டத்தின் அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் நன் மதிப்பைப் பெற்றிருந்தார். கிளிநொச்சியில் எந்த இடத்தில் என்ன பணியை செய்ய வேண்டும், எந்த இடத்தில் என்ன வளம் இருக்கிறது? எந்த இடத்தில் என்ன திட்டத்தை செய்ய வேண்டும் என அறிந்தவர் இராசநாயகம் ஐயா என விடுதலைப் புலிகள் தரப்பு அறிந்திருந்தது.


1996இல் படைகளிடம் கிளி நொச்சி வீழ்ச்சியடைந்த நிலையில் மீண்டும் 1998இல் விடுதலைப் புலிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றினர். அதன் பிறகு ஐந்து இலட்சம் மக்களை மீளக் குடியமர்த்த விடுதலைப் புலிகள் தீர்மானித்த வேளையில் அந்த மீள்குடியேற்றத்தை ஒரு அரச அதிபராகச் சிறப்பான வகையில் முன்னெடுத்தார். பல நாட்களுக்கு மக்களுக்குச் சமைத்த உணவுகளை வழங்கி, மீளக்குடியேறும் மக்களுக்கான தேவைகள், நிவாரணங்களை வழங்க நடவடிக்கைகள் எடுத்தார்.

கிளிநொச்சியில் விவசாயபீடம், பொறியியல்பீடம் அமைக்க பங்களிப்பு செய்த இவர் அழகியல் கலாமன்றம், யோகர்சுவாமி முதியோர் இல்லம் முதலானவற்றையும் அமைத்தார். பிரதிப்பிரதம செயலாளராக பணியாற்றிய இவர் தன் ஓய்வுக்காலத்தில் போரால் பாதிக்கப்பட்ட மகாதேவ ஆச்சிரமத்தை மீளப்புனரமைப்பதில் அரும்பாடுபட்டார். தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் மகாதேவ ஆச்சிர மத்தின் குழந்தைகளுக்காக வாழ்ந்து தொண்டு புரிந்த நிலையில் 2017ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாளன்று இவ்வுலகை விட்டு நீங்கினார். எனினும் தி. இராசநாயகம் அவர்கள் சைவம், தமிழ், சமூகம், நிர்வாகம், போரால் பாதிக்கப்பட்ட மக்க ளின் மீள்வாழ்வு என பன்முகப்பட்ட தளத்தில் மக்களுக்கு ஆற்றிய உயரிய பணிகள் வாயிலாக ஈழ மண்ணில் என்றும் நினைவு கொள்ளப்படுவார்.

தீபச்செல்வன்

# கிளி. மாவட்ட செயலகத்திற்கு வடக்கு ஆளுநர் விஜயம்

## பல விடயங்கள் குறித்து கலந்துரையாடல்



(தருமபுரம்)

வடமாகாண ஆளுநராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நா.வேதநாயகம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது காணி சம்பந்தமான விடயம், மாவட்டத்தின் சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசஅதிபர் செயலாளர், வடமாகாண பிரதம செயலாளர், மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (6-8-316)



மர நடுகை மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் நேற்று மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக கலை, மொழி சார்ந்த பயிற்சி நெறிகளை வருடந்தோறும் நடத்தி வருகின்றது.

இதற்கு அமைவாக தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2025 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், நாடகம் மற்றும் ஆங்கிலம் சிங்களம் ஆகிய பயிற்சி நெறிகளை தொடர்ந்து நடத்தவுள்ளது. இதற்கான வளவாளர்களை நியமிக்கும் பொருட்டு தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள், தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியன அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 11.11. 2024 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம்-தென் மராட்சி, குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன் அறிவித்துள்ளார். (6-8)

# நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி நடத்தும் மறைந்த ஸ்தாபகத் தலைவர் அமரர் சு.நடேசு மற்றும் பொது முகாமையாளர் அமரர். சந்திரராசா ஆகியோரின் நினைவு தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலிச்சந்தி தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தின் கொத்தணித் தலைவர் க.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ... மோகனராசா ... கொள்ளவுள்ளார். (நி-8)

# கோப்பாய் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் சிரமதானப் பணி முன்னெடுக்கப் பட்டது.

எதிர்வரும் கார்த்திகை 27ஆம் திகதி மாவீரர் நாள் இடம்பெறவுள்ள நிலையில் இம்மாதத்தின் ஆரம்பத்திலிருந்து துயிலும் இல்லங்களை துப்புரவு செய்யும் பணியில்தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் முதற் கட்டமாக நேற்று கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாகச்சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன. (6-8-33)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 621





அந்த மாபெரும் ஜனக் கூட்டத்தின் முன்னால் வந்தியத்தேவனுக்குப் பரிந்து பேசவும் முடியவில்லை. "என்னிடம் பிற்பாடு வரப் போகிறாராமே? வரட்டும் ஒரு கை பார்த்து விடுகிறேன்!" என்று மனத்தில் கறுவிக் கொண்டே தன் அந்தப்புரத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

செம்பியன் மாதேவி சோழ சாம்ராஜ்யத்தில் அனைவருடைய பயபக்தி மரியாதைக்கும் உரியவராயிருந்தவர். முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயரும் அதற்கு விலக்கானவர் அல்ல. ஆனாலும், அம்மூதாட்டி இச்சமயம் ஏதோ ஒருவித பயத்துடனேயே நடந்து கொண்டார். அநிருத்தர் ஆசனத்தில் அமர்ந்த பிறகே தாம் அமர்ந்தார்.

"ஐயா! சில காலமாக என் தலையில் இடிமேல் இடியாக விழுந்து கொண்டிருக்கிறது. நீரும் அத்தகைய செய்தி ஏதேனும் கொண்டு வந்தீரா? அல்லது ஆறுதலான வார்த்தை சொல்லப் போகிறீரா?" என்று வினவினார்.

"அம்மணி! மன்னியுங்கள்! தங்கள் கேள்விக்கு என்னால் விடை சொல்ல முடியவில்லை. நான் கொண்டு வந்திருக்கும் செய்தியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது!" என்றார் தந்திரத்திலே தேர்ந்த மாதிரி.

"பொன்னியின் செல்வனைப் பற்றிய செய்தி உண்மைதானா ஐயா! என்னால் நம்பவே முடியவில்லையே? அருள்மொழிவர்மனைப் பற்றி நாம் என்னவெல்லாம் நம்பிக் கொண்டிருந்தோம்? இந்த உலகத்தையே ஒரு குடை நிழலில் ஆளப்பிறந்தவன் என்று நாம் எத்தனை தடவை பேசியிருக்கிறோம்?

"பெருமாட்டி! ஜோசியர்கள் அவ்விதம் சொல்வதாகத் தாங்கள் என்னிடம் கூறியது உண்மைதான். அடியேன் தங்களை மறுத்தும் பேசியதில்லை ஒத்துக்கொண்டும் பேசியதில்லை!"

"அது போகட்டும் இப்போது சொல்லுங்கள். பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் கொள்ளை கொண்டுவிட்டது நிச்சயந்தானா?"

நிச்சயம் என்று யார் சொல்ல முடியும், தாயே! அம்மாதிரி செய்தி நாடு நகரமெங்கும் பரவியிருப்பது நிச்சயம்.

அது உண்மை என்று ஏற்பட்டால், இந்தச் சோழ நாட்டின் கதி என்ன? எத்தகைய விபரீதங்கள் ஏற்படும்?

"விபரீதங்கள் அது உண்மை என்று ஏற்படும் வரையில் காத்திருக்கப் போவதில்லையென்று தோன்றுகிறது"

"ஆம் ஆம்! விபரீதம் நேரிடுவதற்கு வதந்தியே போதுமானதுதான். இந்தப் பழையாறை நகரமக்கள் இவ்வளவு ஆத்திரங்கொண்டு திரளாக அரண்மனைக்குள் பிரவேசித்ததை இதுவரையில் நான் பார்த்ததில்லை.

பழையாறையில் மட்டுந்தான் இப்படி நடந்ததென்று கருதவேண்டாம் தஞ்சாவூர் நகரம் நேற்று முதல் அல்லோல கல்லோலமாயிருக்கிறது. வேலைக்காரப் படையினர் சக்கரவர்த்தியின் அரண்மனையை விட்டு நகர மறுத்துவிட்டார்கள். மக்கள் கோட்டைக்குள் திரள்திரளாகப் புகுந்து பழுவேட்டரையர்களின் மாளிகைகளைச் சூழ்ந்து கொண்டார்கள் மதங்கொண்ட யானைகளை ஜனங்கள் பேரில் ஏவி விட்டு அவர்களைக் கலைந்து போகும்படி செய்ய வேண்டியதாயிற்று ஐயோ! இது என்ன விபரீதம்! எத்தகைய பயங்கரமான செய்தி!

"மதுராந்தகர் பழையாறைக்கு வந்துவிட்டதே நல்லதாய்ப் போயிற்று.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## காக்கை நண்பன்



ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில நெல் விவசாயம் செய்துகொண்டிருந்தார். அவருடைய வீட்டிற்கு பக்கத்தில் இருக்கின்ற மரத் தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதில் நிறைய காக்ககைள் வாழ்ந்து வந்தன.

எப்போதும் தன்னுடைய வீட்டை சுத்தி சத்தம் போட்டுக் கொண்டே இருந்த காகங்களை அந்த விவசாயிக்கு பிடிக்கவே பிடிக்காது.

இருந்தாலும் தன்னுடைய வீட்டில இருந்த பழைய சாப்பாடு, தானியங்கள் என்று காகங்களிற்கு சாப்பிடக் கொடுப்பார்.

ஒருநாள் அவருடைய விவசாய நிலத்திற்கு நிறைய வெட்டுக் கிளிகள் வந்தன.

அவை நிறைய தானியங்களை உண்பது மட்டுமில்லாமல் பயிர்களையே சாப்பிட ஆரம்பித்தன. அதை பார்த்த விவசாயி வருத்தப்பட்டார்.

எவ்வளவு கஷ்டப் பட்டாவது இந்த வெட்டுக்கிளிகளை விரட்டணும் என்று முயற்சி செய்தார். ஆனால் நிறைய வெட்டுக்கிளிகள் இருந்ததால் அவரால் எல்லாவற்றையும் விரட்ட முடியவில்லை.

வருத்தப்பட்ட விவசாயி ஒன்றுமே செய்ய முடியாமல் வருத்தத்தில அங்கேயே உட்கார்ந்து தன்னுடைய நெற் பயிர்களை வெட்டுக் கிளிகள் சாப்பிட்டு நாசமாக்குவதைப் பார்த்து கொண்டு இருந்தார்.

வருத்தமாக உட்கார்ந்து இருந்த விவசாயியைப் பார்த்த காகங்கள் உடனே பறந்து வந்து வெட்டுக்கிளிகளை பிடிச்சு சாப்பிட ஆரம்பித்தன.

இதைப் பார்த்த விவசாயிகளுக்கு ரொம்ப சந்தோசமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக எல்லா வெட்டுகிளிகளையும் பிடித்து உண்ட காகங்கள் எல்லாவற்றையும் பார்த்த விவசாயி அடடா இத்தனை நாள் நமக்கு தொந்தரவு என்று நினைத்துக் கொண்டு இருந்த காகங்கள் எல்லாம் தான் கொடுத்த சிறிய உணவுக்காக, இப்ப நமக்கு உதவி செய்து நம்மைக் காப்பாற்றி விட்டது என்று ரொம்ப சந்தோஷப் பட்டார்.

அன்றில் இருந்து காகங்களோடு சேர்ந்து தன்னுடைய வாழ்க்கைய வாழ ஆரம்பித்தார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்களுக்கும் உங்களது வாழ்க்கைக்கும் நீங்கள் அளிக்கும் மரியாதையே உண்மையான ஒழுக்கமாகும் ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீபாவளிப் பண்டிகையின்போது மூடப்பட்ட மதுபானசாலைகள்

2024 ஒக்ரோபர் 31ஆம் திகதி (நேற்று முன்தினம்) தீபாவளிப் பண்டிகை.

பொதுவில் தீபாவளிப் பண்டிகையின் உட்பொருளை உணராதவர்கள்; தீபாவளித் திருநாளில் மது அருந்தி, இறைச்சி மாமிசம் உண்டு மகிழ்வர்.

போதாக்குறைக்கு தீபாவளி அன்று புதுப் புதுத் திரைப்படங்கள் வெளியாகும்.

அந்தப் படங்களைப் பார்ப்பதற்காக இளைஞர் குழாம் படையெடுக்கும். சினிமாத் திரையரங்குகள் நிறைந்து வழியும். ஆசனம் கிடைக்காதவர்கள் தியேட்டர்கள் மீது கல்வீச்சு நடத்துவர். தியேட்டர் நுழைவாயிலில் உள்ள இரும்புக் கதவு உடைக்கப்படும். இந்நிகழ்வுகள் தீபாவளி நாளில் சர்வசாதாரணமாக நடைபெறும்.

இத்தோடு தீபாவளிக் கொண்டாட்டம் முடிந்தால் எவ்வளவோ மேல் எனலாம். ஆனால் அதுதான் இல்லை.

இன்னொரு தரப்பு நிறை போதையில் தள்ளாடும். வீதிகளில் நின்று அங்கு போவோர் வருவோருடன் சேட்டை செய்யும்.

இதற்கும் மேலாக கோஷ்டி மோதல், அடிபாடு, வாள்வெட்டு, வீதி விபத்து என தீபாவளித் திருநாள் களேபரமாக மாறும்.

இவ்வாறாக தீபாவளிக் கொண்டாட்டம் அமைவதால், சோலியை விரும்பாதவர்கள் அன்றைய நாளில் தத்தம் வீடுகளுக்குள் முடங்கிவிடுவர்.

இவையாவற்றுக்கும் மேலாக, அன்றைய நாளில் மதுபானச்சாலைகள், இறைச்சிக் கடைகள் என்பன வைகறையில் துயிலெழுந்து தூப தீபத்தோடு வியாபாரத்தை ஆரம்பித்துவிடும்.

என்ன செய்வது அதர்மம் அழிந்த நாளை மிகவும் தெய்வீகமாகப் போற்றி வழிபட வேண்டிய நேரத்தில், அழிந்த நரகாசுரன் நமக்குள் புகுந்ததுபோல அன்றைய நாளில் நாம் வெறியாட்டம் ஆடிவிடுகிறோம்.

இது புராணங்கள் விதந்துரைக்கின்ற தீபாவளித் திருநாளுக்கு ஒவ்வாததாகும்.

எனவே தீபாவளித் திருநாளை மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும்.

இதன் பொருட்டு கடந்த வருடம் தீபாவளி நாளில் மதுபானசாலைகளை மூடவேண்டும் என இவ்விடத்தில் எழுதியிருந்தோம். அதே நேரம் தீபாவளி அன்று மதுபானசாலைகளை மூடுங்கள் என கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் வடக்கு ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக இந்த வருடமும் தீபாவளித் திருநாளில் மதுபானசாலைகளை மூடுங்கள் என கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் கடிதம் வடக்கின் ஆளுநர் நா.வேதநாயகன் ஊடாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பலனாக மதுபானச்சாலைகள் மூடப்பட்டன.

இதன் காரணமாக எத்தனையோ விபத்துக்கள், அடிபாடுகள், குடும்பச் சண்டைகள், வன்முறைகள் தவிர்க்கப்பட்டன.

படுகாயமடைபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து போனது. தீபாவளி அமைதியாகக் கடந்து போனது.

ஆக, இதுபோன்ற நல்ல காரியங்களை அமுல்படுத்தி நம் மக்கள் எதிர்நோக்கும் துன்பத்தைத் தவிர்ப்போம்.

# மன்னாரில் அதானி குழுமத்தின் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம்

## டெல்லி செல்லும் இலங்கைக் குழுவினர்

(கொழும்பு)

இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் பணி தொடர்பில கலந்துரையாடல்களை நடத்த எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று புதுடில்லி செல்லவுள்ளது.

மன்னாரில் அதானி குழுமக் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு ஆரம்பகட்டப் பணிகளும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள முடக்கம் தொடர்பில் பேச்சு நடாத்த இலங்கைப் பிரதிநிதிகள் டெல்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக திட்டத்தின் ஊடாக 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

என்றாலும், திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் வெளியாகியிருந்ததுடன், தற்போதைய அரசாங்கமும் இத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி அரசாங்கத்தின் புதிய நிலைப்பாட்டை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தும் இருந்தார்.

காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்திற்கு கடந்த அமைச்சரவை வழங்கிய அனுமதியை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வனஜீவராசிகள், இயற்கை வளங்கள் பாதுகாப்புச் சங்கம், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சில தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் திட்டத்தை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை உயர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு இடையே காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் குறித்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பொதுத் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த இலங்கை அரசாங்கத்துக்கு புதுடில்லியில் இருந்து அழைப்புக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்ட குழுவொன்று புதுடில்லி செல்லவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

### முதல் 10 மாதங்களில்

## 16இலட்சத்தைக் கடந்த சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் நாட்டிற்குப் பிரவேசித்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதன்படி, நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து ஆயிரத்து 949 ஆகும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தின் நிறைவடைந்த 27 நாட்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 17ஆயிரத்து 141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா, ரஷ்யா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தே வந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## தேர்தல் தொடர்பில் 1,259 முறைப்பாடுகள் பதிவு

எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்து 259 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 123 புகார்கள் வந்துள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பெறப்பட்ட மொத்த புகார்களில் வன்முறை தொடர்பான 13 புகார்களும் பெறப்பட்டுள்ளன.

எனினும், மொத்தமுள்ள ஆயிரத்து 259 புகார்களில் ஆயிரத்து 18 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பருத்தித்துறையில் ஆட்டோக்கு தீ வைப்பு

(கரணவாய்)

பருத்தித்துறையில் இனந்தெரியாதோரால் முச்சக்கர வண்டி ஒன்றுக்கு தீ வைத்ததில் முச்சக்கர வண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை 4ம் குறுக்குத் தெருப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த பகுதியில் வசிக்கும் பாலசுப்பிரமணியம் மதியழகன் என்பவரது முச்சக்கர வண்டிக்கு தீவைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,60)

## வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 17தேர்தல் முறைப்பாடுகள் பதிவு

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், வவுனியா அரச அதிபருமான பீ.ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , இதுவரை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 17 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளது.

அத்துடன் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வன்னி மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது.

அந்தவகையில் வவுனியாவில்182, மன்னாரில் 98, முல்லைத்தீவில் 137 நிலையங்களும் அமைக்கப்படும்.

இதேவேளை, வவுனியாவில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக சைவப் பிரகாச மகளிர் கல்லூரியும், மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலகமும், முல்லைத்தீவில் முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வன்னித்தேர்தல்மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலில் 30,6081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் வவுனியாவில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும், முல்லைத்தீவில் 86 ஆயிரத்து 889 பேரும், மன்னாரில் 90 ஆயிரத்து 607 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றார். (ம-7,250)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம் மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.**

-வாரன் பஃபெட்(அமெரிக்கத்தொழிலதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024

## தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு(வ) - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - களத்திர ஸ்தானத்தில் சூரியன் - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சனி (வ) - அயன சயன போக ஸ்தானத்தில் ராகு என கிரக நிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று லாப ஸ்தானத்தில் சனி வக்ர நிவர்த்தி ஆகிறார் : 08.11.2024 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று அஷ்டம ஸ்தானத்தில் புதன் வக்ரம் பெற ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சூரியன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடும் மேஷ ராசியினரே! இந்த மாதம் நல்ல பலன்களை பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். சற்று கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். கலைத்துறையினருக்கு தொழில்தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சககலைஞர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது நன்மை தரும். கோபத்தைக் குறைத்து தன்மையாக பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.

அரசியல் துறையினர் தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி




கள் செய்ய தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

**அஸ்வினி:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம்.

**பரணி:** இந்த மாதம் யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வீண் மனக் கவலை, காரிய தாமதம் உண்டாகலாம் கவனம் தேவை. பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடின போக்கு சாதகமான பலன் தரும். புதிய ஓடர்கள் கிடைக்க பெறுவீர்கள். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். கௌரவம் கூடும். நிலுவை தொகை வந்து சேரும். பதவி உயர்வு கிடைக்கலாம்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் நவகிரகத்தில் செவ்வாயை அர்ச்சனை செய்து தீபம் ஏற்றி வணங்குவது வாழ்வில் முன்னேற்றத்தை தரும் ;

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - செவ்வாய் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 3, 4, 30

**அதிர்ஷ்ட தினங்கள்:** 23, 24

## குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும்



**கிரகநிலை** - ராசியில் குரு(வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன் - சப்தம ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சனி (வ) - லாப ஸ்தானத்தில் ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று தொழில் ஸ்தானத்தில் சனி வக்ரம் நிவர்த்தி ஆகிறார் ; 08.11.2024 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 13.11.2024 அன்று களத்திர ஸ்தானத்தில் புதன் வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 16.11.2024 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சூரியன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகுமுறையால் வெற்றி காணும் ரிஷப ராசியினரே! இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெற போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். நயமாக பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருட்களை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும்.

கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சக கலைஞர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது நன்மை தரும். கோபத்தைக் குறைத்து தன்மையாக பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும். அரசியல் துறையினருக்கு தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது.

எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள்




செய்ய தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம். மாணவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறைய கூடும். நன்கு படிப்பது நல்லது. பெற்றோர் ஆதரவு பெருகும். வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**ரோகிணி:** இந்த மாதம் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**மிருகசிரீஷம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் செல்வ சேர்க்கை உண்டாகும். எந்த ஒரு வேலையையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தனாதிபதி சுக்கிரன் சஞ்சாரத்தால் பண வரவு அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமையில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 5, 6, 7

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26, 27

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டிசம்பர்...

பர் மாதத் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டுக் கடவுச்சீட்டு விநியோகத்தை விரைவுபடுத்த முடியும் என எதிர்பார்ப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் 7 இலட்சத்திற்கும் அதிகமான வெற்றுக் கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறவுள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான முறையான இணைய வழி முறைமை தற்போதைய நிலையில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் தினத்தில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## அரிசித்...

என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சமூக நலன்புரி வழங்கும் வேலைத் திட்டங்களை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரிசி விலையை ஸ்திரப்படுத்தல் மற்றும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு நீண்டகாலத் தீர்வு காண்பதற்கு நெல் களஞ்சியக் கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதன் முக்கியத்துவம் மற்றும் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நலன்புரித் திட்டங்கள் உள்ளிட்ட சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)

## வெளிப்படையான...

கரிக்க வழிவகுக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்தியானாவைத் தளமாகக் கொண்ட ஷீல்ட் (SHIELD) நிறுவனத்தின் புதிய சீட்பெல்ட் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உற்பத்தியாளர்களை இலங்கைக்கு ஈர்ப்பதில் வெளிப்படைத் தன்மை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் அவசியமானவையாக இருக்கும்.

புதிய அரசாங்கத்தால் முதலீட்டுச் சூழலை வலுப்படுத்தவும், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தவும், வர்த்தக நட்பு ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும் முடிந்தால் நாட்டில் முதலீடு செய்ய சர்வதேச உற்பத்தியாளர்கள் தயாராக இருப்பார்கள்.

அமெரிக்கா ஏற்கெனவே இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாகவுள்ளது. இங்கு நேரடியாக அதிக அமெரிக்க முதலீட்டைப் பார்ப்பது அற்புதமானது. வரவிருக்கும் ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு இரு வழிகளிலும் விரிவடைவதைக் காண விரும்புகிறோம்.

புதிய அரசாங்கம் முதலீட்டுச் சூழலை வலுப்படுத்தவும், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை செயற்படுத்தவும், வணிக நட்பு ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும் முடிந்தால் இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என்றார். (ம-7)

## ஊடகங்களுக்கு...

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு மத்திய கொழும்பு மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றியபோதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரமானது முக்கியமானதொரு அங்கமாகும். ஒரு நாட்டின் ஊடகங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மிக முக்கியமான தூண்களில் ஒன்றாகப் பலர் ஏற்றுக்கொண்டாலும், அன்று ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க ஊடக சுதந்திரம் குறித்து பேசிய விடயங்கள், ஊடக உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்காகப் பேசினாலும், இன்று அவர் ஜனாதிபதியாகி ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க முற்படுகிறார். ஜனநாயகம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தும் அவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள்.

நமது நாட்டின் ஊடகத்துறைக்கு தற்போதைய ஜனாதிபதியோ அல்லது அரசியல்வாதிகளோ ஊடக சுதந்திரம் குறித்து ஆலோசனை வழங்கத் தேவையில்லை.

ஜனநாயகத்தின் முக்கிய தூணாக விளங்கும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஊடக சுதந்திரம் மற்றும் ஒழுக்கக் கோவை பேணப்பட வேண்டும். ஆனால், அது ஊடகங்களால் உருவாக்கப்பட்ட சுய கட்டுப்பாட்டு முறையின்படி அமைய வேண்டும்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்த சட்டங்களை இயற்றுமாறு ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஆலோசனை வழங்குவது, கண்டிப்பது ஊடக சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விடுக்கப்பட்ட மரண அடியாகும்.

ஊடகத்தைக் கண்டித்து அறிவுரை வழங்குவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ம-7)

# 16 வெளிநாட்டுத் தூதுவர்களை நாட்டுக்கு அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில்பணியாற்றும் 16 இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பி அழைப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய ஆட்சிக் காலங்களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இலங்கைத் தூதரகங்களில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள்என்ற அடிப்படையில் இவர்கள் அனைவரையும்உடனடியாக நாடு திரும்புமாறு வெளிவிவகாரஅமைச்சு அறிவித்துள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் இந்த முடிவின்படி அமெரிக்கா, லொஸ்ஏஞ்சல்ஸ்துணைத் தூதரகத்துக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி லலித் சந்திரதாஸ, சீனா, சங்காய் துணைத் தூதரகத்துக் கான இலங்கைத் தூதுவர் அநுர பெர்ணாண்டோ, சென்னைக்கானதுணை உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரன், சவுதி அரேபியா,ஜெட்டா துணைத் தூதரகத்துக்கான இலங்கைத் தூதுவர் எஸ்.எம்.ஏ.எகவ். மௌலானா, வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி, நிஷான் மனிக் முத்துகிருஸ்ணா,வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரக மூன்றாம் நிலைச் செயலாளர் தாரக திஸநாயக்க, லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் மூன்றாம் நிலைச் செயலாளர் சஞ்ஜய் புஞ்சிநிலமே, ரோம் தூதுவராலய அதிகாரி மெல்ஹி சந்திம பெரேரா. அவுஸ்திரேலியாவின் கன்பெரா உயர்ஸ்தானிகராலயஅதிகாரி டினுக்க கரமெலின் பெர்ணான்டோ, பரீஸ் தூதரக மூன்றாம் நிலைச் செயலாளர் சஹஸ்ர பண்டார, மொஸ்கோ தூதரக அதிகாரி பந்துல டீ சொய்ஸா, புதுடில்லிக்கான இலங்கைத் துணைத் தூதரக அதிகாரி கலாநிதி அன்வர் மெஹமட் ஹம்தானி, பேய்ஷரூட் தூதரக மூன்றாம் நிலைச்செயலாளர் பிரயங்கிகா திஸநாயக்கே, அங்காராவின் இரண்டாம் நிலைச் செயலாளர் ஜஸ்மின் ஹில்மிமொஹமட், நெதர்லாந்தின் ஹகுகோ தூதரகத்தின்துணைத் தூதுவர் அஸ்வினி ஹப்பன்கம, சுவீடனின் ஸ்ரொக்லோம் தூதரக அதிகாரி ஜானக ரணதுங்க ஆகியோரையே உடனடியாக நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னைய ஆட்சிக் காலங்களில்அரசியல் செல்வாக்கின் காரணமாக வெளிநாட்டுத்தூதரகங்களில் பணிக்கமர்த்தப்பட்ட மேலும் பலர் விரைவில் திருப்பி அழைக்கப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## இலங்கை...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் இந்திய உதவியின் கீழ் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இங்கு விரிவான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அந்தத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்டகாலத் தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வட மாகாண கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடிப் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை மீனவ சமூகத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத் திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதில் இந்திய துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டேவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 5643
U 9 0 8 2 1 0
அத சம்பத
U 8 2 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 218

தன நிதானய
திகதி - 2024.11.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1673
E 24 40 56 78 E
45667

மெகா பவர்
திகதி 01/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1991
M 05 07 26 58 65
084596

லக்கி 7 VIP
திகதி 2024.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 0469
P 1 8 5 6 6 4 P


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3885
சீட்டிழுப்பு திகதி 01.11.2024
U 07 46 49 79
U 101327

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 952
கும்பம் 17 40 45 54 கும்பம்
150730 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
# பாராளுமன்ற தேர்தல் - 2024

## வன்னித் தேர்தல் மாவட்டம்



X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

## தி.இடபாருடன்

மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்



எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு

(042)



# WEC COLLEGE
விசா ஆலோசனை மையம்

கடந்த 14 வருடகாலமாக யாழ் மண்ணில் சிறந்த சேவைகளை வழங்கிவரும் முன்னணி நிறுவனத்தினூடாக உங்கள் உயர்கல்வியினை மேலைத்தேய நாடு ஒன்றில் தொடர விருப்பமா?

## STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND

20வருட அனுபவம் ஆளுமை நேர்த்தியுடன் கூடிய வளவாளர்களின் நெறிப்படுத்தலுடன்

## IELTS
UKVI ACADEMIC/GENERAL-Computer
ACADEMIC / GENERAL-Computer Base
ACADEMIC / GENERAL-Paper Base
IELTS Life Skills - A1/A2/B1/B2

அலுவலகங்கள்:
WEC College
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும்
சாவகச்சேரி

(505)

0779265447/ 0217200989



நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 02 நாட்களே

அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

0768226244

55000 இலவச விசாக்கள்

வெளிநாடு செல்வது எனது இலட்சியம் எனது குடும்ப பொருளாதார வசதியை பொருத்தளவில் அது கனவு. எனது இலட்சியத்தினையும் கனவினையும் ஒரு கணத்தில் நிறைவேற்றிய V2 Travels க்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.

(C-1500)

V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0768226243 | யாழ்ப்பாணம் 0777068777 | யாழ்ப்பாணம் 0777720322 | 0764550675 |
| சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 | சங்கானை 0777728322 | கோப்பாய் 0764550674 | 0764550670 | பண்டத்தரிப்பு 0777716322 |
| புத்தூர் 0764550671 | நெல்லியடி 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | பருத்தித்துறை 0768226230 | 0776697960 |



# திரு ரியூசன் சென்ரர்
## கோண்டாவில்

கல்வியாண்டு 2025
தரம் - 6

ஆரம்பம் 04.11.2024
திங். பி.ப 3.00 மணி

(2543)

புதிதாக சேரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கப்படும்.

T P : 0777 960 138



# Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg றவை | - 284/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 780/= |
| 1Kg கீரி சம்பா | - 250/= |
| 1Kg சம்பா | - 226/= |
| 1Kg பயறு | - 659/= |
| 1Kg சோயா | - 440/= |
| 750 ml நல்லெண்ணை | - 1460/= ~~1550/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3525/= ~~3900/=~~ |
| 180 ml *Chik* சம்போ | - 440/= ~~480/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 380/= ~~500/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= ~~145/=~~ |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(507)

Happy Supermarket
0777 8080 30






# விடியலின் திசை




## தபால்பெட்டி
சின்னத்திற்கு வாக்களிப்பீர்



- வடக்குப் பிரதேச மக்களின் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு நிரந்தர தீர்வுகளை முன்மொழிவதற்கான வழிகாட்டியாக 'விடியலின் திசை' செயல்படும்
- மக்கள், தளத்தில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதன் மூலம், உடனடி தீர்வு தேவைப்படும் முக்கிய பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்தலாம்
- தரவரிசையில் முன்னிலை வகிக்கும் முக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நான் நேரடியாக மேற்கொள்ளுவேன்
- நான் மட்டுமன்றி, வடக்கு பகுதியின் மற்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், அரச சேவையாளர்களும், தளத்தில் முன்வைக்கப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்க இணைந்து செயற்படவேண்டும்
- தனித்தல்ல, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே நமக்கான நிரந்தர தீர்வுகளை அடையமுடியும். இதற்கான தொடக்க முயற்சியாக 'விடியலின் திசை' அமையும்

(C-073)

ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
ஜனநாயக தேசிய கூட்டணி
Democratic National Alliance



X

1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.